செ.வெ.எண்: 23 நாள்: 10.10.2021

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, ஐந்தாம் கட்டமாக கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 800 -க்கும் மேற்பட்ட மையங்களில் மாபெரும் கொரோனா தடுப்பூசி செலுத்தும் முகாம் நடைபெற்றது.**

**மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.வி.ஜெயசந்திர பானுரெட்டி இ.ஆ,ப. அவர்கள் இன்று (10.10.2021) நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.**

**கிருஷ்ணகிரி மாவட்டத்தில் இதுவரை நடைபெற்ற நான்கு மாபெரும் கொரோனா தடுப்பூசி முகாம்களில் முதல் மற்றும் இரண்டாவது தவணையாக 2 இலட்சத்து 15 ஆயிரத்து 943 நபர்கள் தடுப்பூசி செலுத்திக்கொண்டுள்ளனர் என மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.வி.ஜெயசந்திர பானுரெட்டி இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் அரசு மருத்துவ கல்லூரி, அரசு மருத்துவமனை மையங்களிலும், இ.எஸ்.ஐ மருத்துவமனை மையத்திலும், அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களிலும், பேரூராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள் என மொத்தம் 800 -க்கும் மேற்பட்ட மையங்களில் ஐந்தாம் கட்டமாக மாபெரும் கொரோனா தடுப்பூசி செலுத்தும் முகாம் இன்று (10.10.2021) நடைபெற்றது.

கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டிணம் பேரூராட்சி, காவேரிப்பட்டிணம் பேருந்து நிலையம், கிருஷ்ணகிரி ஊராட்சி ஒன்றியம், சோக்காடி ஊராட்சியில் உள்ள அங்கன்வாடி மையம், கெலமங்கலம் ஊராட்சி ஒன்றியம் இராயக்கோட்டை ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி மற்றும் சூளகிரி பேருந்து நிலையத்தில் கொரோனா தடுப்பூசி செலுத்தும் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.வி.ஜெயசந்திர பானுரெட்டி இ.ஆ,ப. அவர்கள், இன்று (10.10.2021) நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

**மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப., அவர்கள் தெரிவித்தாவது:**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, ஐந்தாம் கட்டமாக கிருஷ்ணகிரி மாவட்டத்தில் இன்று (10.10.22021) 800 -க்கும் மேற்பட்ட மையங்களில் மாபெரும் கொரோனா தடுப்பூசி செலுத்தும் முகாம் விரிவாக ஏற்பாடு செய்யப்பட்டு நடைபெறுகிறது.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் இதுவரை கொரோனா தடுப்பூசி போடாதவர்கள், இரண்டாவது தவணை போட வேண்டியவர்கள் பயனடையும் வகையில் கொரோனா தடுப்பூசி முகாம் காலை 7.00 மணி முதல் மாலை 7- மணி வரை தொடர்ந்து 10 ஊராட்சி ஒன்றியங்கள், மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சிகளில் உள்ள வார்டு பகுதிகளிலும், ஊராட்சி மற்றும் கிராம பகுதிகளில் உள்ள அரசு மற்றும் தனியார் பள்ளி வளாகங்களிலும், அரசு ஆரம்ப சுகாதார மையம், அரசு மருத்துவமனைகளில் என 800 -க்கும் மேற்பட்ட மையங்களில் கொரோனா தடுப்பூசி செலுத்தும் முகாம் நடைபெறுகிறது.

முதற்கட்டமாக 12.09.2021 அன்று நடைபெற்ற மாபெரும் கொரொனா தடுப்பூசி செலுத்தும் முகாமில் 71,209 தடுப்பூசிகளும், இரண்டாம் கட்டமாக 19.09.2021 அன்று நடைபெற்ற மாபெரும் தடுப்பூசி செலுத்தும் முகாமில் 49,047 தடுப்பூசிகளும், மூன்றாம் கட்டமாக (26.09.2021) அன்று 55,600 தடுப்பூசிகளும், நான்காம் கட்டமாக (03.10.2021) அன்று 40,087 தடுப்பூசிகள் என மொத்தம் 2,15,943 தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளது.

இன்று கோவிஷீல்டு 1,05,500 தடுப்பூசிகளும், கோவேக்சின் 7,570 தடுப்பூசிகள் என மொத்தம் 1,13,070 தடுப்பூசிகள் இருப்பில் உள்ளது. எனவே, இந்த முகாம்களில் தடுப்பூசி செலுத்திக்கொண்டு பொதுமக்கள் தங்களையும் தங்கள் குடும்பத்தினரையும் கொரோனா நோய் தொற்றிலிருந்து பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.வி.ஜெயசந்திர பானுரெட்டி இ.ஆ,ப. அவர்கள் தெரிவித்தார்.

இந்த ஆய்வின் போது துணை இயக்குநர் (சுகாதார பணிகள்) மரு.வி.கோவிந்தன், கிருஷ்ணகிரி வட்டாட்சியர் திரு.சரவணன், வட்டார மருத்துவ அலுவலர்கள் மரு.தாமரைச்செல்வி, மரு.மூர்த்தி, மரு.வெண்ணிலா மற்றும் சுகாதார பணியாளர்கள் உள்ளிட்ட துறை சார்ந்த அலுவலர்கள் உடன் இருந்தனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கிருஷ்ணகிரி.**